**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ஆம் நாள் திங்கட்கிழமை**

**இடைக்கால மனு எண். 4/2026**
**இன்**
**அசல் வழக்கு எண். 49/2022**

குமரேசன் .... மனுதாரர் / வாதி

**/ எதிர் /**

1.தனம்
2.மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
3.வட்டாட்சியர், மானாமதுரை
4.வட்டார வளர்ச்சி அலுவலர்,
மானாமதுரை ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
5.முத்துராமலிங்கம் ...எதிர்மனுதாரர்/Proposed 5ம் பிரதிவாதி

இம்மனு என்முன்பு 17.04.2026 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஜீவானந்தம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்பாபு அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிருரை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

**1.** மனுதாரர் தரப்பில் சிபிசி ஆர்டர் 1 ரூல் 10(2) மற்றும் பிரிவு 151ன் படி மனுவில் கண்ட 5ம் புரபோஸ்டு எதிர்மனுதாரரை தாவா வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2) மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்/வாதி, பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளநிலையில், தாவா சொத்தை நீதிமன்ற ஆணையாளர் பார்வையிட்டு வருவாய்துறை அதிகாரிகளுடன் அளவீடு செய்தபோது தாவா சொத்தில் சில பகுதி இடம் Proposed 5ம் எதிர்மனுதாரர் முத்துராமலிங்கம் என்பவர் பெயரில் இருந்து வருவதாக குறிப்பிட்டதாகவும், மேற்படி இடம் தன்னுடைய அனுபவத்தில் நாளதுதேதி வரை இருந்து வருவதாகவும், எனவே அவரை பொறுத்து தாவா வழக்கில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை கட்டுபடுத்தும் வகையில் தாவா வழக்கில் அவர் அவசிய தரப்பினர் என்றும், தனக்கு உடல்நிலை சரியில்லாததால் இதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்க முடியாமல் போய்விட்டது என்றும், எனவே Proposed 5ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மறுப்பதாகவும், நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள ABCD பகுதியானது தாவா சொத்து சர்வே எண்.5/1பி1 என்றும், 5ம் பிரதிவாதியாக குறிப்பிட்டுள்ள முத்துராமலிங்கம் என்பவரின் தந்தை கிருஷ்ணன் பெயரில் சர்வே எண்.5/8 உள்ளதாகவும், அதற்கடுத்து தெற்கே சர்வே எண்.5/9 தன்னுடைய வீடு என்றும், தாவா சொத்தின் கிழக்கு பகுதியில் வடபுறம் உள்ள கிருஷ்ணன் வீட்டிற்கும், தாவா சொத்திற்கும் இடையில் 5 அடி உள்ள காலியிடத்தின் வழியாக தனது வீட்டிற்கு தான் சென்றுவருவதை குறிப்பிட்டுள்ளார் என்றும், தாவா சொத்தான புலஎண்.5/1பி1–ல் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என்று தெளிவுபடுத்தியும், வரைபடத்தில் BIHJ என்ற பகுதி தன்னால் பயன்படுத்தி வரும் பகுதியாக குறிப்பிட்டுள்ளார் என்றும், சர்வே எண்.5/1பி1–க்கும், 5ம் எதிர்மனுதாரர் முத்துராமலிங்கத்திற்கும் எந்த சம்பந்தமும், உரிமையும் கிடையாது என்றும், மேலும் புலஎண்.5/8 தற்போதைய உட்பிரிவு புல எண். 5/8ஏ என்ற சொத்து சம்பந்தமாக 5ம் எதிர்மனுதாரர் முத்துராமலிங்கத்தை 1ம் பிரதிவாதியாகவும், அவரது சகோதரர் கர்ணன், சகோதரி கருப்பாயி ஆகிய 3 பேர்கள் மீதும் தன்னால் சமூகம் நீதிமன்றத்தில் OS.No.9/2026 என்ற எண்ணில்

Easement Rights Act விளம்புகை செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாகவும், மனுதாரர் தாவா வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே தாவா மனு தள்ளுபடிக்குரியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மறுப்பதாகவும், தாவா சொத்தின் விஸ்தீர்ணம் மனுதாரரின் ஆவணத்தின் படி எவ்வளவு உள்ளதோ அதற்கு மட்டும் தான் பரிகாரம் கோரமுடியும், அதைவிடுத்து 5ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து மனுதாரின் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு 5ம் எதிர்மனுதாரர் இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்பதற்கு அவரையும் கட்டுப்படுத்தி பரிகாரம் கோருவதற்கு தாவா மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், நீதிமன்ற ஆணையாளர் அளவீடு செய்ததில் தாவா சொத்தின் மொத்த விஸ்தீரண அளவு குறைவு ஏற்பட்டுள்ளது அல்லது வருவாய் துறை ஆவணத்தில் குறைபாடு உள்ளது என்பதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும், தாவா வழக்கில் நீதிமன்ற அறிக்கை தாக்கல் செய்த பிறகு வழக்கு விசாரணை மேற்கொள்ள இருக்கும் சூழ்நிலையில் வழக்கு விசாரணையை காலம்கடத்த தாவா மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றும், 5ம் எதிர்மனுதாரரையும் கட்டுப்படுத்தி பரிகாரம் கோர மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லாத சூழ்நிலையில் தாவா மனு தள்ளுபடிக்குரியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5) இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

**5.1.** மனுதாரர் தனது மனுவில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையாளர் பார்வையிட்டு வருவாய்துறை அதிகாரிகளுடன் அளவீடு செய்தபோது தாவா சொத்தில் உள்ள சில பகுதி இடம் முத்துராமலிங்கம் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**5.2.** தாவா சொத்து தனது அனுபவத்தில் உள்ளதாக மனுதாரர்/வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், தாவா சொத்தின் சில பகுதி மூன்றாம் நபர் பெயரில் இருக்கையில் அவரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கு நடத்தினால் தான் உண்மையில் தாவா சொத்தின் சில பகுதி அனுபவம் மூன்றாம் நபர் முத்துராமலிங்கம் பெயரில் இருந்ததற்கான காரணம் என்ன, தாவா சொத்தின் சில பகுதி அனுபவம் அவரிடம் உள்ளதா அல்லது தாவா சொத்தின் முழு அனுபவம் மனுதாரர்/வாதி வசம் உள்ளதா, எதனடிப்படையில் வருவாய்துறை ஆவணங்கள் முத்துராமலிங்கம் பெயரில் ஏற்பட்டது என்பது போன்ற விசயங்களை கண்டறிந்து இவ்வழக்கில் தீர்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும்.

**5.3.** இம்மனு அனுமதிக்காமல் போனால் தரப்பினர்களுக்கு தேவையற்ற அலைக்கழிப்பு ஏற்படும். எனவே மேலும் வழக்குகள் பெருகுவதை (For Avoiding the Multiplicity of Proceedings) தடுக்கவும், நீதியின் நலன் கருதியும் இம்மனு செலவுத் தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

> “Audi alteram partem is a Latin phrase meaning ‘listen to the other side’, or “let the other side be heard as well”. It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them.”

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஏப்ரல் மாதம் 20ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.20 18:23:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.20 18:24:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

**ORDER**

**I.A.No. 4/2026**
**in**
**OS. No. 49/2022**

**Dated: 20.04.2026**